## Copy of Deposition

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அ.வ.எண்.113/ 2024

The Oaths Act 1969, Act No.44/1969 விதிமுறைகளின்படி 17.03.2026ம் நாளாகிய இன்று திருமதி.P.ஸ்ரீதேவி.,எல்.எல்.எம்., அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.
பி.வா.சா:– 2 நித்யா மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை தொடர்ச்சி:–**

நான் இந்த வழக்கில் என்னுடைய கூடுதல் நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1)26.07.1975ம் தேதியிட்ட அருள்மிகு சொக்கநாச்சியம்மன் திருக்கோவில் நஞ்சை கிளாம்பாடி, ஈரோடு (1–15) பதிவேடு சான்றிடப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.5

2)23.10.2025ம் தேதியிட்ட இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையரின் உத்தரவு பலவகை மனு எண்.41/2024 சான்றிடப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.6

3) அருள்மிகு சொக்க நாச்சியம்மன் திருக்கோவில் நஞ்சை கிளாம்பாடி, கொடுமுடி வட்டம், 6.06 ஏக்கர் நிலம் மீட்பு GPS புகைப்படம் சான்றிடப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.7

4)29.04.2024ம் தேதியிட்ட V.S. பிரணாப் அவர்களின் கடிதம் சான்றிடப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.8

5)15.11.2025ம் தேதியிட்ட நஞ்சை கிளாம்பாடி, கொடுமுடி வட்டம், புகைப்படம் சான்றிடப்பட்ட நகல் பி.வா.சா.ஆ.9 ஆகியவை குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்):–**

நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 5 ஆவணம் என்பது 1 முதல் 15 பதிவேடுகள் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணம் எப்போது தயாரிக்கப்பட்டது என்றால் 1975ம் ஆண்டு தயார் செய்யப்பட்டது. யார் தயார் செய்தார் என்றால் கோவில் நிலங்களுக்கான தனி தாசில்தார் தயார் செய்தார். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை யார் அங்கீகாரம்

## Copy of Deposition

செய்துள்ளார் என்றால் அறநிலையத்துறை ஆணையர் அங்கீகாரம் செய்துள்ளார். பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் தொடர் நடவடிக்கைகள் எடுக்குமாறு ஆணையரால் அறிவுறுத்தப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் அறநிலையத்துறை ஆணையாளார் சில அறிவுறுத்தல்கள் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் முதலாவது அறிவுறுத்தல் என்ன என்றால் அறநிலைய சட்டப்படி சொத்து பதிவேடு தயார் செய்ய வேண்டும் என்று கூறியுள்ளார். 2வதாக சொத்து பதிவேடுகளுக்கும் தற்போதுள்ள பதிவேடுகளுக்கும் எதாவது வேறுபாடு இருந்தால் சரிசெய்யப்படவேண்டும் என்று கூறியுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு சொத்து பதிவேடு தயார் செய்யப்பட்டுள்ளதா என்றால் 2006ல் தயார் செய்யப்பட்டுள்ளது. 1975ம் ஆண்டு ஆணையர் அறிவுறுத்திய பிறகு 2006ம் ஆண்டு 31 ஆண்டுகள் கழித்து சொத்து பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அறநிலையத்துறை ஆணையர் கோப்பு நிலுவையில் இருக்க வேண்டும் என்றும் ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கைகள் முடிக்கப்படவேண்டும என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். ஆனால் சொத்து பதிவேடு 31 ஆண்டுகள் கழித்துதான் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. தற்போது என் வசம் உள்ளது 2006ம் வருட சொத்து பதிவேடு. அதற்கு முந்தைய வருடங்களில் சொத்து பதிவேடு பராமரிக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. 2006ம் வருடம் தயாரிக்கப்பட்ட சொத்து பதிவேடு அறநிலைய சட்டப்பிரிவு 29ன் கீழ் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். இந்து அறநிலைய சட்டப்படி முதல் சொத்து பதிவேடு தயார் செய்யப்படுவது சட்டப்பிரிவு 29ன் கீழ்தான் என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. எனக்கு இந்து அறநிலைய சட்டம் பற்றி தெரியாது என்றால் சரியல்ல. இந்து அறநிலைய சட்டப்படி முதலாவது சொத்து பதிவேடு சட்டப்பிரிவு 29ன் கீழ் தயார் செய்யப்பட வேண்டும், சட்டப்பிரிவு 30ன் படி ஒவ்வொரு ஆண்டும் அந்த சொத்து பதிவேடு சேர்த்தல், நீக்கல் செய்யப்படவேண்டும், சட்டப்பிரிவு 31ன் படி 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய சொத்துப்பதிவேடு தயார் செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். 2006ம் ஆண்டு சொத்து பதிவேடு அதன் பின்னர் சட்டப்பிரிவு 30ன் படி சேர்த்தல், நீக்கல் செய்யப்படவேண்டும், 10 ஆண்டுகளுக்கு பின்னர் சட்டப்பிரிவு 31ன் புதிய பதிவேடு தயார் செய்யப்படவேண்டும் என்பதன் அடிப்படையில் பதிவேடுகள்

## Copy of Deposition

தயார் செய்யப்பட்டு ஆணையரால் அங்கீகரிக்கப்பட்டதா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.5 வது பதிவேடுகளில் 1 முதல் 15 பதிவேடுகளில் எண்.1 சர்வே எண்.454/1 ல் 0.08.05 கோவிலுக்கு சொந்தமான நிலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கிடை கோவிலான சொக்கநாச்சி அம்மன் கோவிலுக்கு இரயத்துவாரி பட்டா சட்டப்பிரிவு 30/63ன்படி பிரிவு பட்டா வழங்கப்பட்டதில் இதர சர்வே எண்களும் அடங்கும். பட்டா வழங்கப்பட்ட பிறகுதான் சொத்து பதிவேடு தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்து பதிவேடு பி.வா.சா.ஆ.4 அங்கீகரிக்கப்பட்ட சொத்து பதிவேடு என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் வழக்கிடை கோவிலுக்கான சொத்து விவரத்தில் சர்வே எண்.454/1ல் 0.010 ஹெக்டேர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கிடை கோவிலுக்கான சொத்துக்களுக்கும் பி.வா.சா.ஆ.4ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களுக்கும் சர்வே எண்.454/1ல் 7 .5 ஏர்ஸ் (18.5 செண்ட்) வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் இந்த சொத்துக்கள் அனைத்தும் பூசாரிகளால் தனிப்பட்ட விவசாயம் (personal cultivation by poojaris of the temple) செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் கோவில் நிலங்கள் சம்பந்தப்பட்ட பல சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது, அதில் சர்வே எண்.454/1ம் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை தயார் செய்த பரம்பரை அறங்காவலர்கள் வழக்கிடை கோவிலுக்கான சொத்துக்களை குறைத்து சட்டப்பிரிவு 29ன் கீழ் பதிவேடு தயார் செய்திருக்கிறார்கள், இந்த பதிவேட்டை அங்கீகரித்த அப்போதைய இந்து அறைநிலையத்துறை அலுவலர்கள் சரிபார்க்கவில்லை என்றால் சரியல்ல. பதிவேடு எண்.11ல் சர்வே எண்.259ல் 63 சென்ட் நிலம் பூசாரிகளால் விற்பனை செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் மேற்படி நிலம் தற்போதும் திருக்கோவில் சுவாதீனத்தில் உள்ளது. மேற்படி விற்பனை பத்திரத்தை இரத்து செய்ய சட்ட நடவடிக்கை எடுத்தோமா என்றால் சொத்து தற்போதும் திருக்கோவில் சுவாதீனத்தில் இருப்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. பரம்பரை அறங்காவலர்கள் கோவில் சொத்துக்களை விற்பனை செய்துள்ளார்கள் என்றாலும், அதற்காக அவர்கள் மீது அறநிலையத்துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு விற்பனை செய்த

**Copy of Deposition**

பரம்பரை அறங்காவலர்களின் வாரிசுகளை அடுத்த அறங்காவலர்களா நியமித்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்து எந்த கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் புஞ்சை கிளாம்பாடி அ கிராமத்தில் அமைந்துள்ளது. பி.வா.சா.ஆ.6 உத்தரவில் நஞ்சை கிளாம்பாடி கிராமம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே உத்தரவில் சொத்து விவரத்திலும் நஞ்சை கிளாம்பாடி கிராமம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே இந்த உத்தரவு நஞ்சை கிளாம்பாடி கிராமத்தில் உள்ள சொத்தை கட்டுப்படுத்துமே தவிர புஞ்சை கிளாம்பாடி கிராமத்தில் உள்ள சொத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இந்த உத்தரவின் மீது மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இணை ஆணையர் நடத்திய சட்டப்பிரிவு 78ன் கீழான இந்த விசாரணையில் எதிர் மனுதாரர் நேரடியாக விசாரிக்கப்படவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேலும் இந்த விசாரணை தொடர்பாக குறுக்கு விசாரணை செய்வதற்கு அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அறநிலைய சட்டப்பிரிவு 78ன் படி வெளியேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டாலும் சட்டப்பிரிவு 79ன் படி சிவில் நீதிமன்றத்தில் உரிமை மூல வழக்கு தாக்கல் செய்யலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போதுதான் இணை ஆணையரின் வெளியேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். வழக்கிடை சொத்து வாதியின் குடும்பத்தில் 100 ஆண்டுகளுக்கு மேல் உள்ளதால் குடிவார உரிமை அவர்களுக்கு உண்டு அதனால் வழக்கிடை சொத்திற்கு உரிமை மூலம் முழுமையாக அவர்களுக்கு உண்டு என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் 1975ம் வருடத்திலேயே பதிவேடு எண்.5ல் வாதிகள் ஆக்கிரமிப்பாளர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பாளரின் பெயர் மற்றும் முகவரி என்ற இடத்தில் V.S. மாணிக்க சுந்தரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.467ல் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 4.64 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மற்றொரு சர்வே எண்ணான 349ல் மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 6.12 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஆக்கிரமிப்பாளரின் பெயர் V.S. மாணிக்க சுந்தரம் மற்றும் 2 நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சாட்சி தன்னிச்சையாக சர்வே எண்.349

## Copy of Deposition

சொத்தின் சுவாதீனத்தை V.S. பிரணாப் த/பெ.V.M. சுப்ரமணியம் என்பவர் ஒப்படைத்துள்ளார். 1975ம் ஆண்டு ஆக்கிரமிப்பாளர்கள் என்று குறிப்பிட்டும், 50 வருடங்களாக ஆக்கிரமிப்பை அகற்ற சட்டரீதியான என்ன நடவடிக்கை எடுத்தோம் என்றால் துறை ரீதியான நடவடிக்கைகள் எடுத்துள்ளார்கள், அதைப்பற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. V.S.பிரணாப் என்பவரின் தாத்தா V.S. மாணிக்க சுந்தரம். மேற்படி பிரணாப் என்பவருக்கு சொத்தில் 1/4பங்குதான் உள்ளது என்றால் இது கோவில் சொத்து. தற்போது வரை பிரணாப் என்பரின் சுவாதீனத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. பொது ஏலத்தில் அந்த சொத்து விடப்பட்டுள்ளது. எவ்வளவு தொகைக்கு ஏலத்தில் விடப்பட்டுள்ளது என்றால் மொத்த விஸ்தீரணம் 11 ஏக்கர் 98 சென்ட் உள்ளது. அதைப்பிரித்து நிறைய நபர்களுக்கு ஏலம் விடப்பட்டுள்ளது.

மறுவிசாரணை:– இல்லை

| |
|---|
| Taken down by me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.03.17 14:37:23 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |